# DR. A.M.A. AZEEZ ORATION -2009

DONATED
by
S.H.M. JAMEEL

## *DR. A.M.A. AZEEZ-*
## *ICONIC NATION BUILDER*

**By**

*Susil Sirivardana*

24th November 2009

MAIN LIBRARY, SEUSL
SJ008323

**Dr. A.M.A. Azeez Foundation**
47/2A, Fredrica Road, Colombo 6.
Telephone : 2598949

# கலாநிதி ஏ. எம். ஏ. அசீஸ் - தேச நிர்மாணப் பணியில் ஓர் உதாரண முன்னோடி

1911இல் யாழ்நகரில் பிறந்த எ. எம். எ. அஸீஸ் அவர்கள், 1973இல் கொழும்பில் இறையடி சேர்ந்தார்கள். அன்னாரின் வாழ்க்கை 62 வருடங்களான குறுகிய காலமாக இருப்பினும், அவர் ஆற்றிய பணிகள் இலங்கையின் நவீன வரலாற்றின் அழியாத சுவடுகளாகப் பொறிக்கப்பட்டுப் பிரகாசிக்கின்றன. பாரிய கண்ணோட்டத்தில் அவை, தேச நிர்மாணப் பணிகளின் முன்னோடியாகத் திகழ்கின்றன என உருவகப்படுத்தினால் அது மிகையாகாது. நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய கால கட்டத்தையும், அஸீஸ் அவர்களின் ஆக்கப் பணிகளையும் அடுத்தடுத்து அணுகும்போது, அவை எமக்கு அறிவூட்டுபவைகளாக அமைகின்றன. நாட்டின் நிர்மாணப் பணிகளில், நம்பகமான நபர்களைக் காணுதல் நலிவடைந்துள்ள இக்காலத்தில் அஸீஸ் அவர்கள் அமைத்து விட்டுச் சென்றுள்ள அடிச் சுவடுகள் எமக்கு அருமையான உதாரணங்களாக விளங்குகின்றன. இச்சந்தர்ப்பத்தில்தான் அவர் தேச நிர்மாணப் பணியில் ஓர் உதாரண நாயகனாக விளங்குகிறார். ஒவ்வொரு இலங்கையனுடைய கூர்ந்த கவனத்தை ஈர்க்க வேண்டிய சிறப்பம்சங்களைக் கொண்டு திகழ்கிறார் அவர்.

அஸீஸ் அவர்கள் பற்றிய இந்த ஆய்வு, ஏனைய பல முன்னையவர்கள் பல வருடங்களாக எழுதி வந்துள்ள படைப்புகளிலிருந்து வேறுபட்டதாகும். அஸீஸ் அவர்கள் படைத்த அனேக சாதனைகளுள் ஓரிரு பிரசித்தம் பெற்ற சம்பவங்களை மட்டும் தெரிவு செய்து எழுதி வந்துள்ளமை ஏற்றுக் கொள்ளக்கூடியதொன்றே. இவ்வாறான ஓர் அணுகுமுறை காரணமாக இலங்கையில் அவதரித்த இந்த மாமனிதரின் தனித்துவத் தன்மையின் முக்கியத்துவம் தவறவிடப்பட்ட சந்தர்ப்பங்கள் இருக்கவும் கூடும். அவருடைய வாழ்க்கைச் சரிதையை வரலாற்றுடன் ஒன்றிணைந்ததாக அணுகுதல் பொருத்தமாகும். அவர் மேற்கொண்ட ஒவ்வொரு பணியிலும் உயரிய பண்பு, ஆன்மீக மேம்பாடு, அறிவு நிறைந்த புத்திக் கூர்மை, முற்றான அர்ப்பணம், ஆகிய அம்சங்கள் உள்ளடங்குவதை உறுதிப்படுத்தினார். இந்தத் தூய்மையான செயற்பாடுகளின் கூட்டுத் தொகையில் தேசநிர்மாணப் பணிகள் கட்டி எழுப்பப்படுகின்றன.

அஸீஸ் அவர்களின் வாழ்க்கைச் சரிதையை வரலாறு, முக்கியமிகுந்த கால கட்டத்தில் இழையிட்டு அமைத்துள்ளது. அவருடைய வாழ்க்கையின் முதல் முப்பத்தாறு வருடங்களும், இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்னாலுள்ள நான்கு தசாப்தங்கள் ஆகும். இக்காலப் பகுதியில்தான் முழுமையான காலனித்துவ நாடாக இருந்த நமது நாடு, நவீன தேசியச் சிந்தனைகளுடாக சுதந்திரத்திற்காகப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றதன் மூலம் தேச நிர்மாணப் பணிகளின் முதற்கட்ட நடவடிக்கைகள் ஆரம்பமாகின. இக்காலப் பகுதியில், ஒரு காலனித்துவச் சிவில் சேவை அதிகாரியாக இருந்த அஸீஸ் அவர்கள், ஓர் இக்கட்டான நிலைக்குள்ளாக்கப்பட்டார். இறுதி இருப்பத்தைந்து வருடங்களும், சுதந்திரம் கிடைத்த பின்பு கழிக்கப்பட்டவையாகும். இந்த இரண்டு கட்டங்களும் அவருக்குக் 'கொடூரமான' சவால்களாக இருந்ததெனக் கூறலாம். ஏனெனில், தேச நிர்மாணத்தைக் கட்டி எழுப்பக்கூடிய அல்லது அதைப் பலவீனப் படுத்தக்கூடிய தீர்மானங்களை எடுக்க வேண்டிய தேவைக்கு உட்படுத்தப்பட்டவராக இருந்தார். அப்போதுதான் அவர் ஜொலித்தார். அவர் எடுத்த அனைத்து முடிவுகளும் தேச நிர்மாணப் பணிகளை கட்டியெழுப்பக் கட்டாயப்படுத்தும் ஊக்குவிப்புக்களாக விளங்கின.

மேலும் அவருடைய சரிதையைப் பல பகுதிகளாக வகுத்து நோக்கலாம். மதிப்பீடு செய்யும் குறிக்கோளுடன் அதை நான்கு கட்டங்களாக வகுக்கலாம். முதலாவது கட்டம், அவர் பிறந்ததிலிருந்து 1933ஆம் வரையிலுமான காலப்பகுதியாகும். இக்காலப் பகுதி சிறுவனாக இருந்து வாலிபனாக வளர்வதற்கும் தேசிய சேவைகளுக்காகத் தன்னைத் தயார் படுத்திக் கொள்ள வேண்டி இருந்த காலப்பகுதியாகும். இரண்டாவது கட்டம், 1935லிருந்து 1948 வரையிலுமான காலப் பகுதியாகும். இக்காலப் பகுதி, அவர் சிவில் சேவை அதிகாரியாக கடமையாற்றிய காலப்பகுதியாகும். அடுத்த கட்டம் 1948லிருந்து 1961 வரையிலுமான காலப்பகுதியாகும். இது இரண்டு அம்சங்களைக் கொண்டிருந்த தொன்றாகும். ஒன்று, கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் அதிபராகவும் மற்றது, இலங்கைப் பாராளுமன்றத்தின் செனேட் சபை உறுப்பினராகப் பதவி வகித்த காலத்தைக் குறிப்பதாகும். நான்காவது கட்டம், 1963லிருந்து 1970 வரையிலுமான காலப்பகுதியில், கண்ணியமிகுந்த அரசாங்க சேவை ஆணைக்குழுவில் அங்கத்துவம் வகித்தமையும், 1962லிருந்து 1973 வரையிலும் ஆங்கிலத்திலும் தமிழிலும்

பல்பெரும் ஆக்கங்களைப் படைத்து இலக்கியத்திற்கும் சமூகத்திற்கும் ஆற்றிய பெரும் தொண்டுகளைக் குறிப்பதுமாகும். தேச நிர்மாணப் பணி உணர்வும் தாத்பரியமும் இந்த நான்கு கட்டங்களிலும் இழையோடி இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றன. ஒவ்வொரு கட்டமும் முந்திய கட்டத்தைத் தொடர்வதுடன் அதை இறுக்கமாக வலுவடையவும் செய்கின்றது.

## தனக்குத் தானே அமைத்துக் கொண்ட பயணம்.

அஸீஸ் அவர்களின் வாழ்க்கை ஒவ்வொரு படியாகத் தொடர்ச்சியாக ஏறி உச்சத்தை வந்தடைந்த கதையாகும். இதை எவ்வாறு அவர் சாதித்தார்? இதைத்தான் நாங்கள், தனக்குத்தானே அமைத்துக் கொண்ட பயணம் எனத் தலைப்பில் குறிப்பிட்டுள்ளோம். அவருடைய அகவளர்ச்சியின் பிரதிபலிப்பு, வாலிபத்திற்கான வளர்ச்சியில் தென்படுகிறது. 'தனக்குத்தானே' என்ற சொற்கள், ஒரு தனி மனிதனின் தூய்மைத் தன்மையை வெளிப்படுத்துகின்றது. தனக்குள் தானே தெளிவாகச் செயற்பட்டுக் கொள்வதை இது குறிக்கின்றது. தன்னகத்திலுள்ள திறமைகளை வளர்த்துக் கொள்வது இதனால் ஏற்படும் பலனாகும். இது ஓர் உளவளர்ச்சிச் செயல்முறையாகும். இந்தப் பண்புடைத்தான திறமைகளை அசீஸ் அவர்கள் தன்னுடைய பால்ய பருவத்திலேயே பெற்றுக் கொண்டார். இவற்றினால் அவருக்குக் கிடைத்த நன்மைகள், பகுத்துரைக்கக் கூடிய அறிவு வளர்ச்சியும் தளராத தன்னம்பிக்கையுமாகும்.

மேலும் தனக்குத்தானே மேற்கொள்ளும் பயணம், இரண்டு வகைப் பூரணப்படுத்துகின்ற இயல்புகளைக் கொண்டுள்ளன. இதில் முதலாவது, குழந்தையாக இளவலாக, பல்கலைக்கழக மாணவனாக மற்றும் வாலிபனாக மேற்கொள்ளும் தனக்குத் தானே அமைத்துக் கொண்ட பயணமாகும். இரண்டாவதானது, தன்னகத்தினுள் உள்ள ஆற்றல்களை விரிவுபடுத்திக் கொள்ளும் பாரிய அம்சமாகும். இவற்றினுள், இரண்டாவது அம்சமே, ஒருவர் சிக்கலான சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளும் பல்வேறுபட்ட செயற்பாடுகளில் புதியதும் பாரியதுமான சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளச் சக்தியை வழங்குகின்றது.

மரினா இஸ்மாயில், தனது ஆக்கத்தில் குழந்தைப் பருவத்தையும் இளவல் பருவத்தையும் உருக்கமாக இவ்வாறு குறிப்பிடுகின்றார்.[1]

"குடும்ப உறுப்பினர்கள் மத்தியில் தான் அனுபவித்த சாதாரண அன்பும், ஆதரவும், புரிந்துணர்வும் உலகத்திலுள்ள அனைத்துச் செல்வங்களையும் விடச் சிறந்து இருந்தன என்பதை அவர் எங்களுடைய மனதில் பதியும் வண்ணம் எடுத்து உணர்த்தினார். மேலும் அவருடைய வாழ்க்கை மலர்ப்படுக்கையாக இல்லாமல் இருந்ததுடன், கடினமான உழைப்பின் மூலம் தன்னுடைய வாழ்க்கையை அர்த்தமுள்ளதொன்றாக அமைத்துக் கொண்டதாக அவர் எங்களிடம் வலியுறுத்திக் கூறுவார்"

தன்னுடைய ஏழாவது வயதில் அருமைத் தாயை இழந்த அவரை, அவருடைய பாட்டனாரும், பாட்டியும் சிறிய தாயாரும் அமோகமான அன்பைச் சொரிந்து வளர்த்தார்கள். அவருடைய குழந்தைப் பருவத்தில் அவர் மிகுந்த அன்புடனும், பாசமுடனும் வாஞ்சையோடும் வளர்க்கப்பட்டார் என்பதில் ஐயமே இல்லை. "மங்கலாக எரிந்து கொண்டிருந்த எண்ணெய் விளக்கின் ஒளியில் அதிக நேரம் வரை தன்னுடைய பாடங்களைப் படித்துக் கொண்டிருக்கும் அஸீஸ் அவர்களுக்குக் கரிசனையுடனான துணையாக அன்னாரின் "உம்மம்மா" அவர்கள் ஒரு மூலையில் தன் தலையைக் குனிய வைத்த வண்ணம் சாய்ந்து கொண்டிருப்பார்"

மேலும் மரினா இஸ்மாயில் தொடர்கிறார்: "முகைதீன் பள்ளிவாசல் ஒழுங்கையில் வசித்த மாணவர்கள், விளையாட்டுக்களிலும், பாடங்களைப் படிப்பதிலும், பள்ளிவாசலுக்குச் சென்று தொழுவதிலும் ஈடுபட்டிருந்தார்கள். வெள்ளை நிறத் தொப்பியும், வெள்ளைச் சட்டையும், கோடிட்ட சாரமும் அணிந்து சிறார்கள் பள்ளிவாசலுக்குச் சென்று தொழுவார்கள். பின்பு 'முஹம்தியா கலவன் பாடசாலை' யாகப் பெயர் மாற்றம் பெற்ற "அல்லாபிச்சை மத்ரசா' வில் மார்க்கக் கல்வியைப் போதிப்பதற்கு அதிக நேரம் செலவிடப்பட்டது. இதனால் தன்னுடைய இளம் பருவத்திலேயே மார்க்க அனுஷ்டானங்களில் ஆழ்ந்த பற்றுதலுடன் இருந்ததுடன், எங்களின் மீதும் மார்க்கப் பற்றுதலை உட்புகுத்தினார். அவரைப் பாடசாலைக்கு 'பக்கி' வண்டியில் அனுப்புவதற்கு அவருடைய

1 ஏ. எம். ஏ. அசீஸ் - ஒரு பன்முகப் பார்வை என்ற நூலில் குழந்தைப் பருவ நினைவுகள் ஒரு மகளின் ஞபகங்கள்.

பாட்டனாருக்குக் முடியுமாக இருந்த போதிலும், எங்களுடைய தந்தை தினமும் ஒன்றரை மைல்தூரம் பாடசாலைக்கு நடந்து சென்றே வருவார். இது அவர்களுக்கு ஒரு மகிழ்வான நிகழ்வாக இருந்தது. ஏனெனில் மாணவர்கள் அனைவரும் சிரித்துக் கொண்டும், ஒருவரோரொடுவர் அளவாளாவிக் கொண்டும் ஒன்றாகவே நடந்து செல்வார்கள்" இம் மாணவர்கள் மத்தியில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் இருந்தனர். இன்று காணப்படும் பிரிவினை, அன்று தூசியளவும் இருக்கவில்லை.

1963இல் தான் கற்ற கல்லூரியின் பொன் விழாவில் உரை நிகழ்த்திய போது, அவர் கேம்பிரிஜ் பற்றியோ பல்கலைக்கழகம் பற்றியோ குறிப்பிடாமல், தான் கற்கைகள் மேற்கொண்ட முதலாவது கல்லூரியைப் பற்றிப் பின்வருமாறு பேசி உள்ளதாகப் பேராசிரியர் ரைஹானா ரஹீம் குறிப்பிடுகிறார். "நான் வேறு பாடசாலைக்குச் செல்லாமல், வைத்திஸ்வர வித்தியாலயத்திற்குச் சென்றதினால் மூன்று வகைகளில் ஆசீர்வதிக்கப்பட்டேன், என நான் கருதுகிறேன். 1921 பெப்ருவரி தொடக்கம் 1923 ஜுன் வரையிலுமான எனது கற்கைக் காலம் ஓரளவு குறைவாக இருந்தபோதிலும், நான் அங்கே பெற்றிருந்த கற்கை உயர்ந்த தரத்தில் அமைந்திருந்தது. உலகளாவிய பிரசித்தமும் தொன்மையும் கொண்டுள்ள தேன்சுவைத் தமிழ் மொழியில் செறிந்து காணப்படும் பரவசமூட்டும் பக்திப் பாடல்களுக்கு நான் பரிச்சயம் ஆனது என்னுடைய பள்ளிக்கூடமான வைத்திஸ்வர வித்தியாலத்திலேயே. வைத்தீஸ்வராக் கல்லூரிக்குப் பின்பு அவர் யாழ்நகர் இந்துக் கல்லூரியில் தன்னுடைய கல்வியைத் தொடர்ந்தார். ''பிறப்பிலிருந்து இறப்பு வரையிலும் அறிவைத் தேடிக் கொள்ளுங்கள்" எனும் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் போதனையையும் "அறிவே சக்தி" எனும் அறிஞர் பிரான்சிஸ் பேகன் என்பவரின் கூற்றையும் அவர் அடிக்கடி மேற்கோள்களாகக் காட்டுவார்.

அஸீஸ் ஒரு நவீனத்துவ புருடன். பெண்கள் உயர்கல்வி பெறவேண்டுமென்று அவர் கொண்டிருந்த உளப்பாங்கு அதிமுக்கியமான தொன்றாகும். அவருடைய மகள் பேராதெனிய பல்கலைக்கழகத்தில் இணைந்து தன்னுடைய உயர்கல்வியைத் தொடர்வதற்கு அவர் மிகவும் ஆதரவு நல்கினார். இந்த ஆதரவை உண்மைப்படுத்தும் வண்ணம் அவரும் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றார். பல்கலைக்கழகத்திற்குச் செல்லவேண்டிய தறுவாயில், அருமைத் தந்தை அன்பு மகளுக்கு கூறிய வார்த்தைகள் இவ்வாறு இருந்தன. "நான் எனது கற்கையில்

முகமலர்ச்சியுடனும் உற்சாகத்துடனும் ஈடுபட வேண்டும். உலக நன்மைகள் பற்றிய சிந்தனைகள் கூடாது. விரும்பும் கற்கையை வாஞ்சையுடன் கற்றல் வேண்டும். அதில் சிறப்பான சித்தியும் பெறவேண்டும்". இந்த வார்த்தைகளில் ஞான உபதேசம் இழையோடி இருந்தது. இதனுடன் சேர்த்து, தன்னுடைய பரந்த குடும்பத்தைச் சேர்ந்த பெண்பிள்ளைகள் மூலமாகவும் உதாரணங்களை உண்டாக்கினார். பெண்கள் 'பர்தா' அணிய வேண்டும் என்ற நிலையில் இல்லாமல், அவர்கள் மரியாதையான உடைகள் அணிய வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். பெண்களுக்கு சீதனம் வழங்க வேண்டும் என்ற மரபு வழிமுறைமையைக் அவர் அங்கீகரிக்கவில்லை.

1929 இல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்ற அஸீஸ் அவர்கள், அங்கே ஒரு நிதர்சனராளராகத் திகழ்ந்தார். வரலாற்றுத் துறையை விசேடமாகக் கற்ற அவர் இறுதிப் பரீட்சையில் இரண்டாம் வகுப்பு மேல்பிரிவில் சித்தியடைந்து சிறப்புப் பட்டம் பெற்றார். அவருடைய சகாவாகவும் நண்பனாகவும் இருந்த திரு. சி. வன்னியசிங்கம் என்பார், பல்கலைக்கழகத்தில் பயின்ற காலத்தில் அஸீஸ் ஒரு சட்டவறிஞராக வரவேண்டும் என்று விரும்பியதாக ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுள்ளார். 1933இல் வழங்கிய ஒரேயொரு புலமைப் பரிசிலை வென்றெடுத்து, இங்கிலாந்திலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் புனித கதரீன் கல்லூரியில் கற்கைகளைத் தொடரும் வாய்ப்பை 1934ல் பெற்றார். இங்கிலாந்துக்குக் கப்பல் பிரயாணத்தை மேற்கொள்வதற்கு முன்பே, இலங்கைச் சிவில் சேவைத் தேர்வுப் பரீட்சைக்குத் தோற்றி இருந்தார். கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் இணைந்த ஒரு மாதத்தினுள், அவர் இலங்கைச் சிவில் சேவைப் பரீட்சையில் சித்தியெய்தியதனால், இந்தச் சேவையில் இணைந்து கொள்வதற்கு இலங்கை திரும்பினார். இலங்கைச் சிவில் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட முதலாவது முஸ்லிம் என்ற புகழாரத்திற்கும் அவர் ஆளானார்.

அன்னாரின் சரிதையை ஆய்வு செய்கின்ற நாம், அவர் வாழ்ந்த அன்றைய கால கட்டத்தை மனதில் இருத்திக் கொள்ளவேண்டும். தேசங்களுக்கிடையிலே யுத்த பீதி நிலவிய காலம் அது. அகில உலகிலும் குறிப்பாக குடியேற்ற நாடுகளில் புரட்சிகர எதிரொலிகள் எழுப்பப்பட்ட காலம் அது. ரஷ்ய நாட்டில் ஏற்பட்ட புரட்சி மற்றும் அதனால் உண்டான பிரதிபலிப்புக்கள், சீனாவிலும் ஜப்பானிலும்

தோன்றிய விழிப்புணர்வுகள், இந்தியாவில் இடம் பெற்ற சுதந்திரத்துக்கான போராட்டங்கள் இவை யாவும் புரட்சிகர நிகழ்வுகளே. இலங்கையிலும் கூட வரலாற்று முக்கியம் வாய்ந்த மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. குறிப்பாக, டொனமூர் ஆணைக் குழுவையும் முதலாம் இரண்டாம் அரச சபைகளின் முன்னோடியாகத் திகழ்ந்த சர்வசன வாக்குரிமையையும் குறிப்பிடலாம். 1932 லிருந்து 1947 வரையிலுமான இரு அரச சபைகளினதும் ஆட்சி காலப்பகுதியில், அரசாட்சியிலும் நாடு முழுவதிலுமான அபிவிருத்தியிலும் காத்திரமான மாற்றங்கள் உண்டாகின. இருந்த போதிலும், "இந்த அநுகூலமான மாற்றப் போக்குகளில் ஒரு குறிப்பிடத்தக்க வெற்றிடம் - ஒரு நிர்மாணப் பணி வெற்றிடம் காணப்பட்டது. அதுதான் தேச நிர்மாணம். சுதந்திரம் பெறுவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் போது, 'தேச நிர்மாணம்' எனும் அம்சம் மறக்கப்பட்டுவிட்டது. இது தொடர்பாக நாம் வேறொரு வாயிலாக "இல்லாத மூலாதாரம்" எனும் ஆக்கத்தில் ஆய்வு செய்துள்ளோம்.[2]

இதுதான் அஸீஸ் அவர்களின் சாதனைகளையும் அவருக்கு முன்னால் வந்த அபூர்வமான மாமனிதர்கள் சிலருடைய சாதனைகளையும் துல்லியப்படுத்திக் காட்டுகின்றது. இலங்கையின் எதிர்காலம் பற்றிய உறுதியானதும் வலுவானதுமான கருத்துக்களைக் கொண்டிருந்த அஸீஸ் அவர்கள், மிகுந்த புத்திக் கூர்மையுடனும் பாரிய சாமர்த்தியமாகவும் தனக்கு ஏற்பட்ட தடைகளைத் தாண்டி தேசநிர்மாணப் பணிகளில் வெற்றிகரமாக ஈடுபட்டார். இந்த நிகழ்வுகளின் நாயகனையே இன்று நாம் நினைவு கூருகின்றோம்.

இங்குதான் அஸீஸ் அவர்களின் சாதுரியம் தலைதூக்கி நிற்கின்றது. தடைகளைத் தாண்டுவதற்கும் அவர் கற்ற வரலாற்று நிகழ்வுகள் அவருக்குத் துணையாக இருந்தன. அவர் நோக்கிய இலக்கு பாரியதொன்றாகவும் முழுமையானதாகவும் இருந்தது. அவருடைய இலட்சியப் பார்வை முற்றிலும் வேறுபட்டதொன்றாக விளங்கியது. சுருக்கமாகச் சொல்வதானால் அவர் "தன்னைப் பற்றியும் இலங்கை நாட்டைப் பற்றியும் வேறுபட்ட கண்ணோட்டத்திலேயே கண்டார்." இதைத்தான் நாம் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். இன்னும் அதிகமான விடயங்களை விளக்கும் அடுத்த மாற்றுநிலைக்குச் செல்வோம்.

---

2 கட்டுரை ஆசிரியரின் 'இல்லாத மூலாதாரம்' சிங்களம் மட்டும் 50 வருட விசேட வெளியீடு புதிய தொடர் xxxiv 2007 பக்கங்கள் 135 – 147; 2010 இல் வெளிவரும் 'தேச நிர்மாணம்' எனும் நூலில் ஒரு கட்டுரையில் முற்றிலும் வேறுபாடான ஆய்வொன்று மேற்கொள்ளப்படுகிறது.

## அடித்தளத்துடனான சம்மந்தம் (1935 - 1948)

அஸீஸ் அவர்கள் இலங்கைச் சமூகத்தின் அடித்தளத்துடன் குறிப்பாக முஸ்லிம் சமூகத்துடன் கொண்டிருந்த நிரந்தரமான இணைப்பை இந்த உபதலைப்பு குறிக்கின்றது. ஆனால் இச்சம்பந்தம் திட்டவட்டமாக ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மாறாக, ஒரு நாடளாவிய பெரும் ஈடுபாடாகவே இருந்தது. அவருடைய பதின்மூன்று வருட காலச் சிவில் சேவையுடன் இந்த உறவு பின்னிப் பிணைந்து இருந்ததைக் காணக்கூடியதாக இருக்கின்றது. முக்கியமான இரண்டு நிகழ்வுகள் முனைப்புறுத்தல் செய்து காட்டப்படுகின்றன. ஒன்று, கல்முனையில் சேவை செய்த காலத்தில் அவர் ஈட்டிய சாதனை. மற்றது, சுகாதார அமைச்சில் அவர் ஆற்றிய அரும் பெரும் பணி.

இரண்டரை வருடங்கள் சிவில் சேவை இளவலாகப் பணிபுரிந்த பின்பு, அஸீஸ் அவர்கள் அன்றைய நடைமுறைகளுக்கேற்ப, அனேகமான பதவிகளில் குறுகிய காலமும் நீண்ட காலமும் சேவை செய்துள்ளார். கண்டிக் கச்சேரியுடன் இணைக்கப்பட்டிருந்த மாத்தளை நகரில் 1935 – 37 ஆம் ஆண்டுகளில் பணியாற்றிய காலப்பகுதியில் நிகழ்ந்த சம்பவங்கள் முக்கியமானவை. மலேரியாக் காய்ச்சல் மக்களிடையே பரவி, அவர்களைப் பூதாகரமாகத் தாக்கிய காலகட்டம் அது. இக்காய்ச்சல் காரணமாகக் கடுமையான கஷ்டங்களுக்குள்ளாக்கப்பட்ட கண்டியைச் சேர்ந்த கிராமிய மக்களுக்கு, அரச நிவாரணங்களை வழங்குவதற்கு அஸீஸ் அவர்கள் அமர்த்தப்பட்டார். கிராமிய மக்களின் சோகமயமான அவல வாழ்க்கை அஸீஸ் அவர்களின் அக உணர்வுகளைத் தூண்டியது. உணர்ச்சி வசப்பட்டவரும் ஒழுக்க சீலருமான அஸீஸ் அவர்கள், உயர் பதவிகள் வகிக்கும் அரச அலுவலர்கள் ஏழை மக்களுக்கு அன்பும் கருணையும் காட்ட வேண்டுமென்ற திடமான கருத்தைக் கொண்டிருந்தார். சிவில் சேவை அதிகாரிகள் குறித்து பின்வரும் கூற்றை கவனத்தில் கொள்வது பொருத்தமாகும். "குறிப்பாகச் சிவில் சேவைக்குப் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள அலுவலர்கள், தங்களுடைய பதவிகளை இலங்கை மக்களுக்குச் சேவை செய்வதற்கான சந்தர்ப்பங்களாகக் கொள்ள வேண்டுமே தவிர, அவற்றை வெற்றிப் பாதையில் முன்னேறிக் கொள்ளும் படிக்கற்களாகக் கருதக்கூடாது"[3]

3 'மேற்கின் மீள் மதிப்பீடு' பக்கம் 44

கல்முனையில் ஆற்றிய சேவைக்காலப்பகுதி, உணவு உற்பத்தித் துறையில் ஏற்பட்ட நெருக்கடி ஒன்றினால் தேவைப்படுத்தப்பட்டதாகும். இரண்டாவது யுத்த காலத்தின் போது, இலங்கைக்கு உணவுப் பொருட்களைக் ஏற்றிக் கொண்டு வந்த கப்பல்களை, ஜப்பான் தடுத்து நிறுத்தியது. இதன் காரணமாக இலங்கையிலேயே உணவு உற்பத்தித் திட்டம் ஒன்றை அவசர அவசரமாக நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. இந்நோக்கத்திற்காகப் பொருத்தமான இடங்கள் அடையாளங் காணப்பட்டன. கல்முனைப் பிரதேசமும் அடையாளங் காணப்பட்ட பிரதேசமாக இருந்தது. இவ் வேலைத்திட்டத்திற்குப் பொறுப்புதாரியாக இருந்தவர் அன்றைய விவசாய அமைச்சரும் பின்பு பிரதம அமைச்சருமாகத் திகழ்ந்த திரு. டி. எஸ். சேனநாயக்க அவர்களே யாவர். திரு. டி. எஸ். சேனநாயக்க அவர்கள், அஸீஸ் அவர்களைத் தானே தேர்ந்தெடுத்து கல்முனையில் ஓர் அவசரக் கச்சேரியை நிறுவிக் கொண்டு அங்கே உதவி அரசாங்க அதிபராகப் பணியாற்றுமாறு பணித்தார். 1942 ஏப்ரல் மாதத்தில் கல்முனையில் கடமைகளை ஏற்றுக் கொண்ட அஸீஸ், 1944 ஜனவரி வரையிலும் அங்கே பணியாற்றினார்.

அன்னாரின் இந்தக் குறுகிய காலப்பகுதியினுள் கல்முனைப் பிராந்தியம் விவசாயத்தில் வியத்தகு உச்சத்தை அடைந்தது. இந்த அமோக வெற்றிக்குப் பின்புல சக்தியாக இருந்தவர் அஸீஸ் அவர்களே. விவசாயப் பெருமக்களை ஒன்று திரட்டி, வயற்காணிகளையும் மேட்டு நிலங்களையும் அவர்களுக்குப் பகிர்ந்தளித்து, விசேட விதைநெல் வகைகளை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி, கால்நடைப் பண்ணைகளை உருவாக்கி, விவசாயத்துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியதன் மூலம் வெற்றி வீரனாக விளங்கினார். முயற்சி திருவினையாக்கும் எனும் முதுரையை உண்மைப்படுத்தினார்.

கரவாகுப் பற்று, சம்மாந்துறைப் பற்று, அக்கரைப்பற்று, பாணமைப் பற்று மற்றும் வெவகம் பற்று முதலிய பிரதேசங்களை உள்ளடக்கிய (பட்டிருப்பில் இருந்து குமண வரையிலுமான இன்றைய அம்பாரை மாவட்டம்) மாபெரும் நிலப்பரப்பாகத் திகழ்ந்தது. அப்பிரதேசம் அஸீஸ் அவர்களின் அயராத உழைப்பினால், உணவு உற்பத்தியில் ஏராளமானதும் தாராளமானதுமான நிலையை எட்டியதுடன், நாட்டின் அனைவருடைய கவனத்தையும் ஈர்த்துக் கொண்டது. அமைச்சர் திரு. டி. எஸ் சேனநாயக்க அவர்களே நேரடியாகத் தன்னுடைய அலுவலர்கள்

புடைசூழ, 1943 இல் கல்முனைக்கு வருகை தந்து, அங்கே இடம்பெற்ற 'அறுவடை விழாவில்' கலந்து கொண்டமை இந்த வெற்றிக்குச் சான்று பகர்கின்றது. இந்தப் பிரமாத வெற்றிச் சாதனையின் பிதாவான அஸீஸ் அவர்களுக்கு செலுத்தும் நன்றிப் பிரகடனமாக அக்கரைப்பற்றுச் சாகமம் பிரதேசத்தில் 500 ஏக்கர் காணியைகொண்ட நிலப்பரப்பு 'அஸீஸ் துரைக் காண்டம்' எனப் பெயரிடப்பட்டு, இன்றும் இதே பெயரிலேயே அழைக்கப்பட்டு வருகிறது.

பொருளாதாரத்துறையில் ஏற்படுத்திய மறுமலர்ச்சியுடன் அவர் திருப்தி அடைந்து விடவில்லை. அபிவிருத்தி குன்றிய இன்னொரு துறையையும் அவர் கையேற்று, அதிலும் செயற்படத் தொடங்கினார். அதுதான் சமுகத்தில் அன்று நிலவிய அறியாமையும், நிசப்த நிலைமையும். அத்துடன் கல்வித்துறையிலும் தன்னுடைய கவனத்தைச் செலுத்தினார். 1945இல் இலங்கை முஸ்லிம் கல்விச் சகாய நிதியத்தை ஆரம்பம் செய்தவரும் அவரே. அவர் கல்முனையில் உதவி அரச அதிபராகக் கடமை வகித்த காலத்தில் கருவான ஒரு சமுக நலச் சேவையாக இதைக் கொள்ளலாம். வறுமையாகவும் எழுத்தறிவின்றியும் இருக்கும் ஒரு சமுகத்தை நிதி உதவிகள் வழங்கி கல்வி பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன்மூலம் மேம்படுத்த முடியுமென அவர் நம்பினார். இந்த நல்ல நோக்கத்துடன் 1942இல் கல்முனை முஸ்லிம் கல்விச் சபையை நிறுவினார்.[4] இலங்கை முஸ்லிம் கல்விச் சகாய நிதியத்தை நிறுவுவதற்கு இது முன்னோடியதக இருந்தது. தன்னுடைய வாழ்நாள் முழுவதிலும் இந்நிறுவனத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார். இந்நிதியம் என்றும் நிலைத்து நிற்கும் வண்ணம் உறுதியான அடித்தளத்தை அமைத்துள்ளார்.

கல்முனையையும் மட்டுநகரையும் சேர்ந்த அனேகமான மக்களுடன் அவர் நெருங்கிய நட்புறவுடன் இடையறாத தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொண்டிருந்தார். இவர்களிடையே ஏழை உழவர்களும், படித்துப் பதவிகள் வகித்தவர்களும் இருந்தனர். காத்தான்குடி நகரில் பிரபலமாகி இருந்த அப்துல்காதர் லெப்பை அவர்களும், கண்ணியமிக்க சுவாமி விபுலானந்த அடிகளும் அவருடைய உற்ற நண்பர்களாக விளங்கினார்கள்.

---

4 எஸ். எச். எம். ஜெமீல் 'கல்முனை' கட்டுரை

அடுத்து அவர் வெற்றிகள் பல கண்ட இடம் சுகாதார அமைச்சாகும். அன்றைய சுகாதார அமைச்சராகச் சிறந்த சேவையாற்றிய வைத்தியக் கலாநிதி டபிள்யு. ஏ. த. சில்வா அவர்களுடைய அமைச்சின் செயலாளராக அஸீஸ் நியமனம் பெற்றார். டாக்டர் த சில்வா அவர்களின் அரசியல்துறை அர்ப்பணிப்பும் செயற்றிறனும், நாடு முழுவதிலும் ஆரம்ப கிராமிய சுகாதார சிகிச்சை நிலையங்களை நிறுவிக் கிராமிய மக்களுக்குச் சுகாதார வசதிகளை ஏற்படுத்தி வழங்க விழைந்த அஸீஸ் அவர்களுக்கு தாங்கு தூண்களாக அமைந்தன. டாக்டர் த சில்வா அவர்கள் கிராமியச் சுகாதாரம் தொடர்பாக ஆழ்ந்த அறிவையும், ஆர்வத்தையும் மனிதாபிமான குணத்தையும் கொண்டிருந்த கனவான் ஆவார். இவருடைய இந்த நற்பண்புகளைப் பயன்படுத்திக் கொண்டு, கிராமிய மக்களுக்கு உன்னதமான உயர்ந்த சேவையை வழங்கியவர்தான் அஸீஸ். இன்று நாம் பெருமையாகப் பேசிக் கொள்ளும் கிராமியச் சுகாதார உட்கட்டமைப்பு உருவெடுக்க உந்துசக்தியாக இருந்தவர்கள் இவர்கள் இருவருமே.

## செயற்திறன் மிகு இலட்சியவாதி (1948 - 1961)

கண்ணியமும் உயர்வுமிக்க சிவில் சேவை அதிகாரிப் பதவியிலிருந்து, கொழும்பு ஸாஹிராக் கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்ற செயல், சடுதியாக நிகழ்ந்த தொன்றாகும். நாட்டின் சுதந்திரத்திற்காகவும் ஆட்சி அதிகார மாற்றத்திற்காகவும் பேச்சு வார்த்தைகள் உச்ச கட்டத்தில் நிகழ்வுற்ற காலப்பகுதியில் திரு. டி. எஸ் சேனநாயக்க அவர்கள், தன்னுடைய அமைச்சர் சபையை அமைத்துக் கொள்வதில் ஈடுபாடு கொண்டிருந்தார். கலாநிதி ரி. பி. ஜாயா அவர்களையும் தன்னுடைய அமைச்சர்களில் ஒருவராகத் தேர்ந்தெடுத்தார். அப்போது ஜாயா அவர்கள், ஸாஹிராவின் அதிபராக 26 வருடங்கள் அரும் பெரும் பணியாற்றிக் கல்லூரியைக் கட்டி எழுப்பியவராக விளங்கினார். இந்தத் தருணத்தில்தான் ஜாயா அவர்கள், அஸீஸ் அவர்களை ஸாஹிராவின் அதிபர் பதவியை ஏற்குமாறு அழைத்தார். அஸீஸ் அவர்களும் இவ்வழைப்பை ஏற்றுக் கொண்டார். இலங்கை வரலாற்றின் ஒரு முக்கியமான சகாப்தத்தில், தன்னுடைய சமூகத்திற்குச் சேவையாற்ற வேண்டும் என்ற அன்னாரின் அவா, நிறைவேறக்கூடிய ஒரு சந்தர்ப்பமாக இது அமைந்தது. மேலும் அவர் கல்வித்துறையில்தான் அதிக அக்கறை கொண்டிருந்தார். இப்பதவியில்

008323

அவருக்குக் அவரே எசமான் என்பதால் இதை அவர் விரும்பியிருக்கக் கூடும் எனவும் கூறப்படுகின்றது. மேலும், இளம் மாணவர்களை எதிர்காலத்தில் பெரும் பேறுகளைப் பெற்றுப் பிரகாசிக்கும் வண்ணம், வளப்படுத்தியும் மேம்படுத்தியும் வெளியுலகிற்கு அனுப்புவதன் மூலம் தன்னுடைய உள்ளார்ந்த இலட்சியமான தேச நிர்மாணப் பணியில் தன்னுடைய பங்களிப்பை வழங்க முடிந்த ஒரு சந்தர்ப்பமாகவும் இது அமைந்தது.

சாதாரண மக்களுடையதும் சமூகப் பிரமுகர்களுடையதுமான உணர்வலைகளை வெளிக்கொண்டு வருவதற்கு, தன்னுடைய அறிவுக் கூர்மையைப் பயன்படுத்தவும் இந்தப் புதிய பதவி அவருக்கு உதவியது. கல்லூரிக்கு வருகை தந்து கல்லூரியைச் சிறப்பிக்க, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு இராச தந்திரிகளையும் பிரமுகர்களையும் அழைக்கும் வாய்ப்பையும் இந்தப் புதிய பதவி இவருக்குப் பெற்றுக்கொடுத்தது. சுருக்கமாகச் சொன்னால் அவருக்கு அரசியல்வாதிகளுடனும் அறிஞர்களுடனும் அணுகிப் பழகும் வாய்ப்புக்கள் அதிகரித்தன. ஸாஹிராவுக்கு வருகை தந்து சிறப்பித்த பிரமுகர்களுள் மஹாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, சரோஜினி நாயுடு ஆகிய உலகப் பிரமுகர்களும் அடங்குவர்.

ஸாஹிரா பற்றி அவர் கொண்டிருந்த தூர நோக்கு அபூர்வமான தொன்றாகும். பல அமைப்புக்களுடன் தொடர்புடைய நிறுவனமாக அது விளங்கியது. முதலாவதாக அது ஒரு பாடசாலை அல்லது கல்லூரி. கலாநிதி ஜாயா அவர்கள் கல்லூரிக்கான அடித்தளத்தை இட்டார் என்றால், அதைப் பன்மடங்கு கட்டியெழுப்பி பிரகாசம் அடையச் செய்தவர் அஸீஸ் ஆகும். கல்லூரியில் கற்று வெளியேறிய மாணவர்கள் மத்தியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். அவர்கள் எல்லோரும் எதிர்காலத்தில் பிரபலமடையக்கூடிய தொழில் வல்லுனர்கள்.

அவர்கள் பாட விதானங்களுக்குப் புறம்பான நிகழ்வுகளிலும் பிரகாசித்தார்கள். எதிர்பார்த்தது போல பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறித் தொழில்வல்லுநர்களாகத் திகழ்ந்தார்கள். இவ்வாறாகத்தான் தேசிய நீரோட்டத்துடன் தன்னுடைய ஸாஹிராக் கல்லூரியையும் இணைத்திருந்தார். இதனால் அஸீஸ் அவர்களின் காலப்பகுதி ஸாஹிராவின் பொற்கால யுகமாக மிளிர்ந்தது.

இரண்டாவது கட்டமைப்பாக முஸ்லிம் கலாசார நிலையம் விளங்கியது. ஒரு நூலகம், ஒரு சுவடிக் கூடம், ஒரு காட்சி மண்டபம், ஒரு கட்புலச் செவிப்புல விரிவுரை மண்டபம், கண்கவர் பூங்கனித்தோட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஓர் ஆய்வு நிலையமாகத் திகழவேண்டும் என உத்தேசக் கலாசார நிலையம் கருதப்பட்டது. இலங்கையிலும் தென்இந்தியாவிலும் பரவலாக உபயோகிக்கப்படும் அரபுத் தமிழைப் போதிப்பதற்கும் அங்கே ஏற்பாடுகள் செய்யப்படவிருந்தன.

அஸீஸ் அவர்களுடைய முக்கிய சிருஷ்டிகளில் இரண்டு, ‘இலங்கை முஸ்லிம் கல்விச் சகாய நிதியமும்’ ‘அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் சங்கப் பேரவை’யுமாக இருந்தன. முஸ்லிம் கல்விச் சகாய நிதியத்தின் தலைவராக இருந்தார், அஸீஸ் அவர்கள். ஒவ்வொரு வருடமும் நன்கொடைகள் வழங்கியவர்களினதும், நலன்விரும்பிகளினதும் விபரங்கள் அவரால் அறிக்கையிடப்பட்டு வெளியிடப்பட்டன. வெளிப்படைத்தன்மையையும், பொறுப்புடமையையும் முற்று முழுதாக அவர் கடைப்பிடித்தார். 1950இல் ஆரம்பிக்கப்பட்டது ‘அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் சங்கங்களின் பேரவை. ஒரு குடையின் கீழ் ஒன்றிணைந்த அமைப்பாக இயங்கும் இப்பேரவை, இலங்கை முழுவதிலும் நூற்றுக்கு மேற்பட்ட கிளைகளைக் கொண்டுள்ளது. இளைஞர் யுவதிகளுக்குத் தொழில்சார் பயிற்சிகளை வழங்கிப் பொருத்தமான தொழில்களை மேற்கொள்வதற்கு அவர்களுக்கு வழி அமைத்துக் கொடுக்கின்றன இந்தக் கிளைகள். அஸீஸ் அவர்களின் அபூர்வமான சிந்தனையில் பிறந்த அமைப்புக்கள் அல்லவா, இவைகள்!

ஸாஹிராவை இலங்கையின் ஒரு சிறிய பிரபஞ்சமாகக் கண்டார் அவர். “இலங்கை முஸ்லிம்களாகிய நாங்கள் எங்களுடைய கலாசாரத்தைக் கைவிட்டுவிட்டோ அல்லது அரசுக்கெதிரான நடவடிக்கைகளில் அதைப் பயன்படுத்திக் கொண்டோ அல்லது அதை நலிவு படுத்திக்கொண்டோ அல்லாமல், அதைப் பாதுகாத்துக் கொண்டும் பேணிக்கொண்டும் மேம்படுத்திக் கொண்டும் இலங்கை நாட்டிற்கு உயர்ந்த சேவையைச் செய்ய வேண்டும்; ஸாஹிராகல்லூரி எங்களுடைய அந்தத் தனித்துவக் கலாசாரத்தை மேம்படுத்தும் புனித கடமையில் ஈடுபாடு கொண்டு இயங்குகின்றது”.[5] உண்மையில் இது ஓர் அருமையான இலட்சியமே!

5 இலங்கை முஸ்லிம் கலாசார நிலையத்தின் அடிக்கல் நாட்டு விழாவில் நிகழ்த்திய நன்றியுரை – மார்ச் 18, 1958

ஸாஹிராக் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றிய அதே வேளை, செனேட் சபையின் சபாமண்டபத்தில், தன்னுடைய ஆக்கம் நிறைந்த உரைகள் மூலமாக அவர் அளித்த பங்களிப்பையும் நாம் மறந்துவிடலாகாது. தேசியக் கோட்பாடுகள் தொடர்புடைய விடயங்களில் அவர் நேரடியான பங்களிப்பை வழங்கினார். இதனால், புதிதாக சுதந்திரம் அடைந்த இலங்கையின் பிரமுகர்களின் கவனம் இவர் பால் ஈர்க்கப்பட்டது. சிறிய, பெரிய சவால்களையும் அவர் திறமையுடன் முகம் கொடுத்து, அவற்றில் வெற்றி கண்டார். அன்னாரின் 'செனெட் சபை உரைகள்'அடங்கிய நூல் இதற்குச் சான்று பகர்கின்றது.

அஸீஸ் அவர்களின் உள்ளே குடிகொண்டிருந்த அறிவுத்திறன், சிந்தனைச் செறிவு, எழுத்தாற்றல் ஆகிய அம்சங்களை நாம் அவற்றை சுவைத்து இன்புற்ற வண்ணமே நினைவு கொள்ள வேண்டும். அவர் இரு வகைப்பட்ட சமாந்தர அறிவுச் சாலைகளை ஆங்கிலத்திலும் தமிழிலும் உருவாக்கினார். அவை ஆழமாக ஆய்வு செய்ய வேண்டிய ஆக்கங்களாகும். அவருடைய நண்பர்கள் பலர், அன்னாரின் பிரத்தியேக நூலகம் ஓர் 'அறிவாலயமாகத்' திகழ்ந்தது என வர்ணித்துள்ளார்கள். அவருடைய அறிவின் வீச்சு கவர்ச்சி நிறைந்ததாக இருந்தது. தேசத்தின் கோட்பாடுகள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பாகச் செனேட் சபையில் தெரிவித்த தன்னுடைய கருத்துக்களைத் தான் தலைமை தாங்கிய கல்லூரியிலும் தான் பங்குகொண்ட நிகழ்வுகளிலும் நாளாந்தம் தெளிவாக நடைமுறைப்படுத்தினார். அவருடைய எழுத்தாக்கங்களில், வரலாற்று நிகழ்வுகள் நிறைந்துள்ளமையைக் காணமுடிகின்றது. ஒரு கட்டத்தில் "வெள்ளை நிற மனிதனின் சுமை நாகரீகத்தின் அணிகலனை நசுக்க வந்த இரும்புக்கர ஆதிக்கம்" என இந்திய மக்கள் கொண்டிருந்த அபிப்பிராயம் தவறானது என கண்ணியமிக்க சுவாமி விவேகானந்தர் அவர்கள் அந்த மக்களுக்கு எடுத்துரைத்த நிகழ்வைக் குறிப்பிடுகின்றார்.[6]

முஸ்லிம்களின் நவீன கல்வி தொடர்பாக, வரலாற்று ரீதியாகவும் இஸ்லாமியக் கண்ணோட்டத்திலும் அவர் முழுமையான ஆய்வொன்றை மேற்கொண்டிருந்தார். எடுத்துக்காட்டாக, அவர் சித்திலெப்பை அவர்கள் பற்றிக் குறிப்பிடும் போது, "முஸ்லிம்களிடையே பயங்கரமாகப் பரவி வரும் நோய்க்குரிய பரிகாரம் இஸ்லாமிய சூழலில் நவீன முறைகளில் அமைந்த கல்வியை அவர்களுக்கு ஊட்டுவதே" என்ற கூற்றை நினைவு

6 'மேற்கின் மீள் மதிப்பீடு' – பக்கம் 68

படுத்தினார். நாம் இங்கு உபயோகிக்கப்பட்ட வார்த்தைகளின் ஈர்ப்பு விசையை நோக்குதல் வேண்டும். மேலும் அவர் தொடர்கிறார்: "…..இவற்றில் கல்வி தொடர்புடைய அம்சமே மிக முக்கியமானது. சேர் செய்யத் அகமது கான் அவர்களினால் தோற்றுவிக்கப்பட்ட 'அலிகார் இயக்கம்' , பௌத்த மத ஞான சபைகளினால் முன்னெடுக்கப்பட்ட மதம் மற்றும் கல்வி தொடர்பான மறுமலர்ச்சி, ஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் தலைமையில் உதித்த ஹிந்து மத விவகார சீரமைப்புக்கள், எகிப்து நாட்டின் சுதந்திரப் போராட்டத்தின் தந்தையென வர்ணிக்கப்பட்டாலும் அங்கிருந்து நாடு கடத்தப்பட்டு இலங்கையில் வதிவிடத்தை அமைத்துக் கொண்டிருந்த இலங்கை முஸ்லிம்களின் அபிமானத்தைப் பெற்ற அரபி பாஷா அவர்கள் ஆகிய இஸ்லாமிய, இந்திய, எகிப்து மற்றும் உள்ளூர் செம்மல்களின் ஒன்று சேர்ந்த குவிமய செல்வாக்குக் காரணமாக 19ஆம் நூற்றாண்டின் இறுதியில், இலங்கை முஸ்லிம்களின் மத்தியிலும் கல்வி தொடர்பான பாரிய விழிப்புணர்வு ஏற்பட்டது"[7]

இலங்கையில் முகம்மது இக்பால் அவர்களை அறிமுகப்படுத்திய நற்பெயரும் அஸீஸ் அவர்களையே சாரும். பிரபல கவிஞராகவும் மெய்யிலாளராகவும் மதிக்கப்பட்டவர் இக்பால். இக்பால் அவர்கள் பற்றி அஸீஸ் இவ்வாறு கூறுகிறார்: "இக்பால் எங்களுடைய யுகத்தைச் சேர்ந்தவர். எங்களுடைய கலாசார முரண்பாடுகளுக்கு ஒரு நல்ல தீர்வையும் எங்களுக்கு ஒரு நல்ல செய்தியையும் அவர் கொண்டுள்ளார். கிழக்கு மேற்குக் கலாசாரங்களுடன் எங்களுடைய தொன்மையான கலாசாரத்தையும் இணைத்துக் கொண்டு புதுமையைக் காணுமாறு அவர் எங்களிடம் வேண்டுகிறார். இவ்வாறாக இக்பால் எங்களுக்குப் புதிய வழியைக் காட்டிக் கொண்டு, அதில் பயணிக்குமாறு கேட்டுக் கொள்கிறார்.[8]

இஸ்லாமிய கலாசாரத் துறையில் ஒரு மாபெரும் சிந்தனையாளராகவும், தூரநோக்கு ஆற்றல் நிரம்பியவராகவும் அஸீஸ் அவர்கள் இலங்கையில் மட்டுமல்ல இந்திய உபகண்டத்திலும் பிரபலம் பெற்றிருந்தார். இதனால் 20ம் நூற்றாண்டின் 100 பெரும் முஸ்லிம் தலைவர்களில் ஒருவராகத் கணித்துத் தெரிவு செய்யப்பட்ட கௌரவத்திற்கு உள்ளானார்.

7 'மேற்கின் மீள் மதிப்பீடு' – பக்கம் 117
8 'மேற்கின் மீள் மதிப்பீடு' – பக்கம் 161

மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கியவர் அஸீஸ். தங்களுடைய பிள்ளைகள் அஸீஸ் அவர்களுடைய கல்லூரியில் கற்கிறார்கள் என்று கூறுவதில் பெற்றோர்கள் பெருமிதமும் நிம்மதியும் அடைந்தார்கள். இவர்களிடையே முஸ்லிமல்லாத பெற்றோர்களும் இருந்தனர். இங்கேயும் தேசநிர்மாணப் பணி பளிச்சிடுவதைப் பார்க்க முடியுமாக இருக்கின்றது. பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள், அஸீஸ் அவர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் "அஸீஸ் அவர்கள் ஒரு மாமனிதர் மட்டுமல்ல அவர் ஒரு நிறுவனமாகத் திகழ்ந்தார்" என்று மனமாரப் புகழ்கின்றார்.

## இறுதிக் கட்டம் (1963 - 1973)

அவருடைய வாழ்நாளின் இறுதிக்கட்டம்கூட மேலும் வெற்றிப்படிகளை ஏறிய கதையாகவே உள்ளது. 1963 இல் அவர் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். 1970 வரை இந்த ஆணைக்குழுவில் பணிபுரிந்தார். குறைகளை விசாரணை செய்யும் இந்த மேன்முறையீட்டுக் குழுவில் சிறந்த சேவை ஆற்றி சமூக நீதியும் நியாயமும் நிலை பெறச் செய்தார்.

அவருக்குள் ஒழிந்திருந்த மாபெரும் திறமையை வெளி உலகம் தெரிய வந்த சந்தர்ப்பம் இவருடைய இக்காலப் பகுதியில் இடம் பெற்றது. இதுதான் எழுதுவதில் அவர் கொண்டிருந்த அபார ஆற்றல். இதுவரையிலும் கிடைத்திராத அவகாசம் இப்போது கிடைத்ததால், தன்னுடைய தூர நோக்கு இலட்சியங்களையும் அபிலாசைகளையும் எழுத்து வடிவில் படைத்தார். அவருடைய ஆக்கங்களில் ஆளுமையும் ஆற்றலும் மிளிர்ந்து அறிவுப் பசிக்கு விருந்தாக அமைந்தன. அவருடைய படைப்புக்கள் சமுதாயத்தில் காணப்பட்ட பல்வேறு பிளவுகளையெல்லாம் தாண்டிப் பிரகாசித்தன. இலங்கைச் சமுதாயத்தில் அதி உச்ச நிலையில் வைத்துக் கணிக்கப்பட வேண்டியவராக அஸீஸ் விளங்கினார்.

1964 இல் ஆங்கிலத்தில் ஒரு நூலை எழுதி வெளியிட்டார். 172 பக்கங்களைக் கொண்ட அதன் தலைப்பு 'மேற்கின் மீள் மதிப்பீடு' என்பதாகும். குடியேற்ற நிலையிலிருந்து விடுதலை பெறும் தென் ஆசியாவில், மேற்கு மற்றும் கிழக்கு இணைந்த கலாசாரத்தின் பிரதிபலிப்பு என்பதே இந்நூலின் தொனிப் பொருளாகக் கொள்ளலாம். உணர்வுகளைத் தூண்டும் பதினான்கு கட்டுரைகளைக் கொண்டது

இந்நூல். அவற்றில் பதினொரு கட்டுரைகள் இலங்கையுடன் தொடர்பு கொண்டிருந்த பெரியார்கள் பற்றியதும் மற்றைய மூன்றும் புத்த ஜெயந்தி விழாக்கள், வைத்தீஸ்வர வித்தியாலயம் மற்றும் இஸ்லாம் மதம் பற்றியவையுமாகும்.

1960 வரையிலும் அவர் ஆங்கிலத்திலேயே எழுதினார். அதன் பின்னர் தமிழில் எழுதத் தொடங்கினார். அவர் தேசிய மொழிகளை ஊக்குவித்து வளர்க்க வேண்டுமென்ற அவா கொண்டவராக இருந்தார். 'இலங்கையில் இஸ்லாம்' என்ற அவருடைய நூல் 224 பக்கங்களைக் கொண்டிருந்ததுடன் 1963இல் சாஹித்திய விருதையும் பெற்றது. அதைத் தொடர்ந்து அவர் பல பிரயாணக் கட்டுரைகளை வரைந்தார். அவர் தரிசித்த எகிப்து, ஆபிரிக்கா, மலேசியா போன்ற நாடுகளில் அவருக்கேற்பட்ட அனுபவங்களையும் அந்நாட்டுப் பழக்க வழக்கங்களையும் இவற்றில் தெளிவாகவும் சுவையாகவம் விளக்கி உள்ளார். பேராசிரியர் கா. சிவத்தம்பி, இப்பிரயாணக் கட்டுரைகள் தமிழில் எழுதப்பட்ட அதி சிறந்த படைப்புக்கள் எனப் பாராட்டியுள்ளார்.

இவற்றை விடவும் இவருடைய 75 உரைகள் மற்றும் கட்டுரைகள் கோவையிடப்பட்ட மூன்று தொகுதிகளாகப் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. இவை எல்லாவற்றையும் மீள் பிரசுரம் செய்யும்போது, ஆராய்ச்சியாளர்களுக்கும் வரலாற்று ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கும் அரும்பெரும் பொக்கிஷங்களாக அமையும் என்பதில் ஐயமில்லை.

ஸாஹிராவில் பணியாற்றியபோது, கல்லூரி வளாகத்தில் முஸ்லிம் கலாசார நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு மிகவும் விரும்பி இருந்தார். இருப்பினும் அன்றைய அரசியல் சூழலில் இம்முயற்சி சாத்தியப்படாது போயிற்று. பின்னர், வித்யோதய, வித்தியலங்காரப் பிரிவின ஆகிய இரண்டும் பல்கலைக்கழக அந்தஸ்திற்கு உயர்த்தப்பட்ட போது, முஸ்லிம் கலாசாரப் பல்கலைக்கழகம் ஒன்று நிறுவப்பட வேண்டுமென்ற யோசனையை முன்வைத்து இதற்கான முற்சிகளையும் மேற்கொண்டார். அந்த ஆண்டில் இடம் பெற்ற சிம்மாசன பிரசங்கத்திலும் இது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளமை நோக்கப்பாலது. இருப்பினும் இந்த முயற்சியும் கைகூடவில்லை இறுதியாக, 1973இல் பேருவளை ஜாமியா நளீமியாவில் தன்னுடைய கருத்திட்டம் செயற்படுத்தப்படுவதை உறுதிசெய்தார். அவருடைய பெறுமதிமிக்க நூலகத்தின் பெரும் பகுதி இங்கேயே பயன்படுத்தப்படுகின்றது.

தேச நிர்மாணம் என்பதே இந்த நினைவு உரையின் பிரதான கருப்பொருள். இந்தப் புனிதமான சொற்பிரயோகம், இன்று நடைமுறையில் உள்ளதுபோன்று சிறுமைப்படுத்தப் படுவதையோ சிதறுபட்டுச் சின்னாபின்னமாக்கப்படுவதையோ நாம் தவிர்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

தேச நிர்மாணம் என்பது சமூகத்தில் உள்ள பல்துறை ஆற்றல் மிக்கோரின் ஒருங்கிணைக்கப்பட்ட ஆற்றல்களும் சீர்மியங்களும் கொண்ட ஒரு நீண்டதும் கடினமுமான பணியாகும். இலங்கைத் தேசத்தை மீள்நிர்மாணம் செய்யும் ஒரு புனித சேவையாகும். இலங்கை வரலாற்றை மீள் பார்வைசெய்து ஒவ்வொரு கல்லாகக் கட்டியெழுப்ப வேண்டிய கைங்கரியமாகும். தேச நிர்மாணம் எனும் புனிதமும் உயர்வு மிக்கதுமான பணி அலட்சியம் செய்யப்பட்டதால் ஏற்பட்ட விளைவுகள் உள்நாட்டு யுத்தம், சமூகங்களுக்கிடையே நம்பிக்கையின்மை, பெருவாரியாக விதைத்துவிடப்பட்டுள்ள வேற்றுமை விதைகள்!

அஸீஸ் ஒரு வேறுபட்ட மனிதர். அவருடைய வாழ்நாட்களைப் புதிய இலங்கைத் தேசத்தை உருவாக்கச் செலவிட்டார். இதன் பயனாக இன்று எமது தேசம் கட்டியெழுப்பப்படுவதைக் காண்கிறோம். இந்நிலையைத் தோற்றுவிப்பதற்கு அஸீஸ் மேற்கொண்ட பாதை கடினமாக இருந்தது. தடைகள் பல இருந்தன. தடைக்கற்களையெல்லாம் படிக்கற்களாக மாற்றிக் கொண்டு வீறு நடை மேற்கொண்டவர்தான் அஸீஸ்.

தேச நிர்மாணப் பணியில் அஸீஸ் தன்னுடைய பங்களிப்பினை பல வழிகளில் வழங்கினார். நமது நாட்டில் அதி முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்பட்ட விடயம் மொழிப் பிரச்சினையாகும். இந்த மொழிப்பிரச்சினை பற்றி அஸீஸ் கொண்டிருந்த கருத்துக்கள் குறிப்பிடத்தக்கவை. அவர் இலங்கை அரசின் கல்விக் கொள்கையில், சிங்களமும் தமிழும் ஆறாம் தரத்திலிருந்து கற்பிக்கப்படுதல் வேண்டும் என்ற தேவைப்பாடு உள்ளடக்கப்படுதல் வேண்டும் என வற்புறுத்தினார். இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகத் தன்னுடைய கல்லூரியில் சிங்கள மொழி கட்டாய பாடமாக ஆறாம் தரத்திலிருந்து கற்பிக்கப்படுதல் வேண்டும் எனப்பணித்தது மட்டுமல்லாமல் நடைமுறைப்படுத்தவும் செய்தார். “இலங்கை ஒரே தேசம். இங்கே பல்லின மக்கள் வாழ்ந்த

போதிலும் பல மொழிகள் பேசப்பட்ட போதிலும், இலங்கைத் தேசம் ஒரே தேசமே" என்ற தன்னுடைய நிலைப்பாட்டைத் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தி உள்ளார்.[9] 1956 ஜுலை 3ஆந் திகதி அவர் மொழிப்பிரச்சினை தொடர்பாகச் செனேட் சபையில் ஆற்றிய உரை வரலாற்றில் இடம் பெற்றுள்ளதுடன் தேச நிர்மாணப் பணிக்கான தூர நோக்கைத் துலாம்பரமாக விளக்கியது.

கபடம் எது கச்சிதம் எது என்பதையும் நெல்லிலிருந்து பதரை நீக்கும் புத்தி சாதுர்யத்தையும் கொண்டிருந்த அஸீஸ் அவர்கள், சமூகத்தினதும் தேசத்தினதும் பிரச்சினைகளை அலசி ஆய்வு செய்து சிறந்த தீர்மானங்களை எடுக்கும் வல்லமையைப் பெற்றிருந்தது மட்டுமன்றி, அரசாங்க சேவை ஆணைக்குழுவில் பதவி வகித்த காலப்பகுதியில் பாதிக்கப்பட்டு மேன்முறையீடு செய்த அலுவலர்களின் கோவைகளைப் பக்கம் பக்கமாகப் படித்து அலசி ஆராய்ந்து என்றும் எவராலும் சவால் செய்யப்பட்டிராத தீர்மானங்களை எடுத்த திறமைசாலி ஆவார்.

இந்நாட்டின் மறுமலர்ச்சிப் பாதையில் ஜொலித்த அறிவுச் செம்மல்களான, ஆனந்த குமாரசுவாமி, அநகாரிக தர்மபால, பொன்னம்பலம் இராமநாதன், எம். சி. சித்திலெப்பை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், டாக்டர் டபிள்யு. ஏ. த. சில்வா, ஏ.பி. த. சொய்சா, பொல்வத்தே புத்தாத்த தேரர், வெலிவிட்டியே சோரத தேரர், சி. டபிள்யு. டபிள்யு கன்னங்கர, சி.எல். விக்கிரமசிங்க, போல் பீரிஸ், முனிதாச குமாரதுங்க போன்ற இன்னும் பலருடன் ஏ. எம். ஏ. அஸீஸ் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் தாரகையாக விளங்குகின்றார்.

அஸீஸ் அவர்களுடைய ஆக்கங்கள் ஆய்வு செய்யப்பட வேண்டும். இந்தப் பணியில் அஸீஸ் மன்றம் ஆற்றும் சேவைகள் பாராட்டப்பட வேண்டியவை.

அஸீஸ் எம்மத்தியில் விட்டுச் சென்றவை, இன்றைய நோக்கில் மிக முக்கியமானவை. எல்லோருக்கும் அவர் ஓர் உதாரண புருடன்.

9 செனேட் சபை உரைகள் - பக்கங்கள் 29 - 30

## திரு. சுசில் சிரிவர்த்தன

திரு. சுசில் சிரிவர்த்தன அவர்கள் சமூக சேவைத் தொண்டர்; சிறந்த ஓர் அறிவாளி. அவருடைய 1993ஆம் ஆண்டு வரையிலும் நீடித்த அரச பரிபாலன சேவையில் வடக்கும் கிழக்கும் உள்ளிட்டுச் செயற்படுத்தப்பட்ட இரண்டு முக்கியமான வேலைத்திட்டங்களில் தலைமைத்துவப் பங்களிப்புச் செலுத்தியவராவார். முதலாவதாக, பத்து இலட்சம் வீடுகள் அமைக்கும் வேலைத்திட்டம் (1984 - 1989). பின்னர், ஜனசவியத் தேசிய வறுமை ஒழிப்பு வேலைத்திட்டம் (1989 - 1992). இவ்வேலைத்திட்டங்கள் பெறுமதியுடையனவாகவும் ஒப்புரவு கொண்டனவாகவும் முன்னெடுத்துச் செல்லப்பட்டவையாகும்.

அவர் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் சரளமாக எழுதும் வல்லுனர். சிங்களம் மற்றும் தமிழ் கலாசார இணைப்புக்களை வலியுறுத்தும் 'சம்ஸ்கிர்தி' மற்றும் 'மாவத்த' எனும் சஞ்சிகைகளின் ஆசிரியருமாவார். 1976 இல் சிங்களம் மற்றும் தமிழ் நாடக விழாக்களைக் கூட்டாக நடத்தி அதே நாளன்று பரிசில்களும் வழங்கிய நாடக அமைப்புக்குழுவில் அங்கத்துவம் வகித்தார்.

இலங்கையிலும் தெற்காசியாவிலும் 'வறுமைக் குறைப்பு' எனும் தலைப்பில் இரண்டு நூல்களை ஆங்கிலத்தில் எழுதி உள்ளார்.

இலங்கை இன்னும் கட்டி எழுப்பப்பட்டு வரும் தேசம் என்றே அவர் நம்புகிறார். ஆதலால் இன்றைய அதிமுக்கியம் வாய்ந்த விடயம் தேச நிர்மாணப் பணியே. இன்றைய உரையின் தொனிப்பொருளும் அதுவே. இணைந்த துணையுடனும், பூரண பங்கேற்புடனும், சமூகங்களுக்கிடையே நம்பிக்கையை மீண்டும் ஏற்படுத்துவன் மூலமும் தேச நிர்மாணப் பணியை முன்னெடுத்துச் செல்லலாம் என அவர் நம்பிக்கை கொண்டுள்ளார்.

அவர் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் படித்து பட்டம் பெற்றவர். கல்கிசை புனித தோமஸ் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைக் கற்றவர், ஆவார்.

(இணைந்த துணை – Subsidiarity - என்பது ஒரு பரிச்சயமில்லாத சொல்லாக இருக்கலாம். இச் சொல்லின் விளக்கம் :- ஓர் அமைப்பின்

அடிமட்டத்தில் உள்ள மக்களுக்கு, அவர்களுடைய அனைத்து விவகாரங்கள் தொடர்பான முடிவுகளை எடுப்பதற்கு சட்டப்படி அவர்களை வலுவாக்குதல். பின்பு அவர்கள், படிப்படியாக உப – தேசிய, தேசிய மட்டங்களுக்குச் முன்னேறிச் செல்லுதல் - தேசிய மட்டத்திலுள்ளவர்கள் கீழ் மட்டதாரிகளால் தீர்வு கண்டுகொள்ள முடியாத விடயங்களுக்கு மட்டும் பொறுப்புதாரிகளாக இருத்தல்)

**தமிழில் : எஸ். எம். எம். யூசுப்.**

008323